Register No. | | | | | | | | |

# FA9A

5217–22

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

B.A.LL.B./DEGREE (Semester) EXAMINATIONS, JUNE 2022.

(Five – year Regular Course)

Fifth Year – Ninth Semester

CRIMINAL PROCEDURE CODE

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
07 SEP 2022
LIBRARY

Time : $2\frac{1}{2}$ hours | Maximum : 70 marks

## PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the procedure to be followed by a Judicial Magistrate in recording confession statement made before him during the course of investigation.

   புலன் விசாரணையின் பொழுது குற்றவியல் நடுவர் தனக்கு முன்பு அளிக்கப்படும் குற்ற ஏற்புரையினைப் பதிவு செய்ய பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை விளக்கவும்.

2. What is Summary Trial? Explain the procedure for summary trial.

   சுருக்குமுறை விசாரணை என்றால் என்ன? அவ்விசாரணையின் பொழுது பின்பற்ற வேண்டிய நடைமுறை குறித்து விளக்குக.

3. 'For each offence there must be a separate charge' – Examine. State the exceptions to the above rule.

   'ஒவ்வொரு குற்றத்திற்கும் தனிப்பட்ட குற்றச்சாட்டு இருத்தல் வேண்டும்' – ஆராய்க. மேற்கூறிய விதியின் விலக்குகளை சுருக்கமாக விளக்குக.

## PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain about the various institutions involved in the reformation of juvenile.

   இளஞ்சிறார் சீர்திருத்தத்தில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் குறித்து விளக்குக.

5. Discuss the procedure for maintenance of wife, children and parents given in the Criminal Procedure Code.

குற்றவியல் நடைமுறை தொகுப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள மனைவி, குழந்தைகள் மற்றும் பெற்றோர் வாழ்க்கை பொருளுதவி பெற பின்பற்றப்படும் நடைமுறைகளைக் கூறுக.

6. Define Probation. Explain the power of court to release certain offenders after admonition.

நன்னடத்தை கண்காணிப்பு குறித்து விளக்குக. சில வகை குற்றவாளிகளை கண்டிப்பிற்கு பின் விடுதலை செய்ய நீதிமன்றத்திற்கு உள்ள அதிகாரத்தை விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Anticipatory bail.

எதிர்நோக்கு பிணை.

(b) Inquest report.

இறப்பு ஆய்வறிக்கை.

(c) Case diary.

வழக்கு நாட்குறிப்பு.

(d) Borstal School.

சீர்திருத்தப் பள்ளி.

(e) Neglected Juvenile.

கைவிடப்பட்ட சிறார்.

(f) Discharge.

குற்ற விடுவிப்பு.

(g) Period of limitation.

காலநிர்ணயம்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' after committing murder at Madurai absconded. Latter he was caught at Mumbai. Discuss the place of trial.

'அ' என்பவர் மதுரையில் ஒரு கொலையை செய்துவிட்டு தலைமறைவாகிவிடுகிறார். பின்னர் அவர் மும்பையில் கைது செய்யப்படுகிறார். குற்ற விசாரணை எங்கு நடத்த வேண்டும் என்பதை விவாதிக்கவும்.

9. A Judicial Magistrate conducted a summons case trial against a person 'K'. 'K' pleaded guilty and was convicted without framing charge against him. Can it be challenged?

ஒரு நீதித்துறை நடுவர் 'க' என்பவருக்கு எதிராக அழைப்பாணை வழக்கு விசாரணை ஒன்று நடத்தினார். 'க' தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதின் அடிப்படையில் குற்றச்சாட்டை வனையாமல் நடுவர் அவரை-தண்டித்தார். இதனை எதிர்த்து முறையீடு செய்ய முடியுமா?

10. 'A', a police officer, investigates a non-cognizable offence without prior sanction from the magistrate. Discuss the legality of the act of the police officer.

'அ' என்னும் காவல் அலுவலர் ஒரு பிடியாணை வேண்டுங் குற்றத்தில் நீதித்துறை நடுவரின் முன் அனுமதி பெறாமல் புலன் விசாரணை மேற்கொள்கிறார். அவரின் இச்செயல் சட்டப்படி செல்லுமா என்பது குறித்து விவாதிக்கவும்.

---

Register No. | | | | | | | | |

**FA9B**

5218–22

(For the candidates admitted from 2017–2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, JUNE 2022.

(Five – year Regular Course)

Fifth Year – Ninth Semester

CIVIL PROCEDURE CODE

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
07 SEP 2022
LIBRARY

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. 'Vigilantibus non dormintibus jura subveniunt' – Explain.

   'விழிப்புடன் இருப்பவருக்குச் சட்டம் துணையாகும் விழிப்பில்லார்க்கு இல்லை' – விளக்குக.

2. Explain the procedure and grounds on which a court can review its own judgment.

   ஒரு நீதிமன்றம் தன்னுடைய தீர்ப்பை மறு ஆய்வு செய்வதற்கான நடைமுறையையும் காரணங்களையும் விளக்கவும்.

3. Examine the provisions relating to the appointment of commissioner.

   ஆணையர் நியமித்தல் தொடர்பான வகையங்களை ஆராயவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. What is meant by acknowledgement under the Limitation Act?

   காலவரையறை சட்டத்தில் ஒப்பளிப்பு என்றால் என்ன?

5. Explain the powers of an executing court while executing decrees.

   நிறைவேற்றும் நீதிமன்றத்திற்கு தீர்ப்பாணைகளை நிறைவேற்றும் போது உள்ள அதிகாரங்களை விளக்கவும்.

6. Discuss the scope and the powers of High Court in revision. Distinguish it from appeal.

சீராய்வில் உயர்நீதிமன்றத்தின் எல்லையையும், அதிகாரங்களையும் விவாதிக்கவும். சீராய்வை மேல்முறையீட்டிலிருந்து வேறுபடுத்துக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Res sub judice.

நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கு.

(b) Attachment before judgment.

தீர்ப்புக்கு முன் ஜப்தி.

(c) Summary suits.

சுருக்குமுறை வழக்குகள்.

(d) Suits of civil nature.

உரிமை இயல்பு தன்மையான வழக்குகள்.

(e) Next friend.

அடுத்த நண்பர்.

(f) Suit by indigent person.

வறியவர் வழக்கு.

(g) Second Appeal.

இரண்டாம் மேல்முறையீடு.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Raghu deposits a box of jewels with Kumar as his agent. Kannan alleges that the jewels were wrongfully obtained from him by Raghu and claims them from Kumar. Decide.

ரகு என்பவர் தன்னுடைய நகைப்பெட்டியினை குமார் என்ற தன்னுடைய முகவரிடம் வைப்பீடு செய்கின்றார். கண்ணன் என்பவர் அந்த நகைகள் அனைத்தும் தன்னிடம் தவறாக ரகு பெற்றுள்ளார் என்றும் அதனை தனக்கு திருப்பி தர வேண்டும் என்றும் குமாரிடம் கேட்கின்றார். முடிவு செய்க.

9. 'B', published a defamatory statement against 'A'. Hence 'A' filed a suit against 'B' for claiming damages. 'B' died leaving his son 'C' as his legal heir. Whether the suit will continue against 'C'?

'ஆ' என்பவர் 'அ'-வுக்கு எதிராக சில அவதூறு சங்கதிகளை வெளியிடுகின்றார். ஆகவே 'அ' என்பவர் 'ஆ'-வுக்கு எதிராக நஷ்டஈடு கோரி வழக்கு தாக்கல் செய்கிறார். அதன் பின் 'இ' என்பவரை வாரிசாக விட்டு விட்டு 'ஆ' இறந்து விடுகிறார். அந்த வழக்கு 'இ' என்பவருக்கு எதிராக தொடர்ந்து நீடிக்குமா?

10. In a suit the plaintiff was absent after completion of his evidence. The court dismissed the suit. Thereafter the plaintiff applies for setting aside the order of dismissal. Decide.

சாட்சியமளித்த பிறகு வாதியின் தவறுகைக்காக நீதிமன்றம் வழக்கை தள்ளுபடி செய்து விடுகிறது. தள்ளுபடி ஆணையை ரத்து செய்யக் கோரி வாதி விண்ணப்பம் ஒன்று தாக்கல் செய்கின்றார். முடிவு காண்க.

---

Register No. | | | | | | | | |

TIG/TFF

**5283–22**

(Common to semester and non-semester candidates)

**B.L. DEGREE EXAMINATIONS, JUNE 2022.**

(Three-year Regular Course)

Third Year / Sixth Semester

**TAXATION LAW**

Time : Three hours

Maximum : 100 marks

**PART A** — (3 × 16 = 48 marks)

Answer THREE of the following.
பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. Define Tax.
   Distinguish between.
   (a) Tax and Fee.
   (b) Tax and Fine.
   (c) Tax and Toll.
   வரியை வரையறுக்க.
   வேறுபடுத்திக் காட்டு.
   (அ) வரி மற்றும் கட்டணம்.
   (ஆ) வரி மற்றும் அபராதம்.
   (இ) வரி மற்றும் சுங்கம்.

2. Narrate the various kinds of wealth tax assessment under the Wealth Tax Act, 1957.
   செல்வவரிச் சட்டம் 1957ல் செல்வ வரியை மதிப்பீடு செய்யப்படும் வெவ்வேறு வழிமுறைகளை எடுத்துக் கூறுக.

3. Explain the assessment of Income Tax under the head "Income from capital gains".
   ''மூலதன ஆதாயத்தில் இருந்து வரும் வருமான''த்திற்கு, வரி மதிப்பீடு செய்வதை விளக்கவும்.

4. The taxable net wealth includes deemed assets but excludes exempted assets. Explain.
   வரிக்குரிய நிகர செல்வத்தை உள்ளடக்குவது கருதப்படும் சொத்துக்கள், ஆனால் உள்ளடங்காதது விலக்குப் பெற்றச் சொத்துக்கள். விளக்குக.

5. Explain the circumstances where a sale takes place outside the state under the Central Sales Tax Act, 1956.
   மத்திய விற்பனை வரிச்சட்டம், 1956-ன் படி எப்பொழுது ஒரு விற்பனையானது மாநிலத்திற்கு வெளியே நிகழும் என்பதை விளக்குக.

## PART B — (6 × 6 = 36 marks)

6. Write short notes on SIX of the following :
பின்வருவனவற்றுள் ஆறனுக்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Capital assets.
மூலதனச் சொத்து.

(b) Speculative business.
ஊக வணிகம்.

(c) Taxable Turnover.
வரிவிதிப்பிற்குரிய கைமாறும் பணத்தொகை.

(d) Casual Trader.
தற்செயல் வணிகர்.

(e) Assets of Kings under the Wealth Tax Act, 1957.
செல்வவரிச் சட்டம் - 1957ல் மன்னர்களின் சொத்து.

(f) Block of Assets.
சொத்துக்களின் தொகுதி.

(g) Section 80, deductions under Income Tax.
வருமானவரி சட்டத்தின் பிரிவு 80 வரிக்கழிவுகள்.

(h) Perquisites.
பணிச்சலுகைகள்.

## PART C — (2 × 8 = 16 marks)

Answer TWO of the following by referring to provisions of law with cogent reasons.
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்களைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. Explain how the following are treated for the assessment of income-tax for the Assessment year 2008-2009.
2008-2009 வரி மதிப்பீட்டு ஆண்டிற்கு வருமான வரி மதிப்பிடும் போது பின்வருவன எவ்வாறு கருத்தில் கொள்ளப்படுகின்றன என்பதை விளக்குக.

(a) Principal amount paid towards housing loan.
வீட்டுக் கடனுக்காக செலுத்திய அசல் தொகை.

(b) Deduction of salary paid to the employee from income from business.
வியாபாரத்தில் இருந்து வரும் வருமானத்தில் பணியாளருக்குக் கொடுத்த சம்பளத்தின் கழிவு.

(c) Amount spent for the improvement of the capital asset.
மூலதனச் சொத்தை வளப்படுத்தச் செய்த செலவு.

(d) Amount donated to the Prime Minister Relief Fund.
பிரதம மந்திரியின் நிவாரண நிதிக்கு அளித்த நன்கொடை.

8. 'Z' has 5 houses, each worth about Rs.15,00,000 on 31st March 2013. He used one house for his residence. He has got jewels worth of Rs.2,00,000 (2 lakhs). He owed a debt of Rs.5,00,000 to his friend. Find out the wealth tax payable by him for the Assessment year 2013-2014.

2013 மார்ச் மாதம் 31-ம் தேதி 'Z' என்பவருக்கு ஒவ்வொன்றும் தலா ரூபாய் 15,00,000 மதிப்புள்ள 5 வீடுகள் உள்ளன. அதில் ஒரு வீட்டை குடியிருப்பு வீடாக பயன்படுத்துகிறார். மேலும் ரூபாய் 2,00,000 பெறுமான நகைகள் இவரிடம் உள்ளது. இவர் நண்பரிடம் இவர் பெற்ற கடன் ரூபாய் 5,00,000. அவர் 2013-2014 ஆண்டிற்கு செலுத்த வேண்டிய செல்வ வரியை கணக்கிடுக.

9. Mr. Lawrence is the owner of few properties. The value of assets possessed by him on 31st March 2012 is 60 lakhs. On the same date he received interest to the extent of Rs.7 lakhs from Hindu Undivided Family Property. He owes a Mortgage debt of Rs.10 lakhs. Compute his Wealth Tax for the Assessment year 2012-13.

திரு. லாரன்ஸ் என்பவர் சில சொத்துக்களை வைத்திருக்கிறார். அவர் 31 மார்ச் 2012 அன்று வைத்திருந்த சொத்தின் மதிப்பு 60 லட்சம். அதே நாளில் அவர் இந்துக் கூட்டுக் குடும்ப சொத்திலிருந்து ரூ.7 லட்சம் வட்டியாக பெற்றார். அவர் அடைமானம் மூலமாக பத்து லட்சம் ரூபாய் கடன் பெற்றிருந்தார். அவருடைய சொத்துவரியை வரிவிதிப்பு ஆண்டு 2012-13-ம் ஆண்டிற்கு கணக்கிடுக.

---